செ.வெ.எண்: 53/2021 நாள்:30.06.2021

## பத்திரிக்கை செய்தி

## மீன்வளம் மற்றும் நீர்வாழ் உயிரின வளர்ப்பிற்கான தொழில் முனைவோர் மாதிரி திட்டம்

தமிழகத்தில் தொழில் முனைவோர்களை ஊக்குவித்து அவர்களை மீன்வளம் மற்றும் நீர்வாழ் உயிரின வளர்ப்பில் அதிக முதலீடு செய்திடும் நோக்கில் பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டு திட்டத்தின் கீழ் “மீன்வளம் மற்றும் நீர்வாழ் உயிரின வளர்ப்பிற்கான தொழில் முனைவோர் மாதிரி” திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. மீனவர்கள், மீன்வளர்ப்போர், சுய உதவிக்குழுக்கள்/கூட்டு பொருப்புகுழுக்கள்/ மீன்வளர்ப்போர் உற்பத்தியாளர் அமைப்புகள்/ தனிநபர் தொழில்முனைவோர்/ தனியார் நிறுவனங்கள் இத்திட்டத்தில் பயன் பெறலாம். இத்திட்டத்தின் கீழ் பொது பிரிவினருக்கு **25** விழுக்காடு மத்திய மற்றும் மாநில அரசின் நிதியுதவியும் (மொத்த திட்ட மதிப்பீட்டில் மானியத் தொகையின் உச்சவரம்பு ரூ.1.25 கோடி) மற்றும் ஆதிதிராவிடர்/பழங்குடியினர்/மகளிருக்கு **30** விழுக்காடு மத்திய மற்றும் மாநில அரசின் நிதியுதவியும் (மொத்த திட்ட மதிப்பீட்டில் மானிய தொகையின் உச்ச வரம்பு ரூ.1.50 கோடி) வழங்கப்படும். இத்திட்டத்தில் பயன்பெற விரும்புவோர் ஈரோடு மீன்வளம் மற்றும் மீனவர்நலத் துறை உதவி இயக்குநர் அலுவலத்தினை தொடர்பு கொள்ளலாம். இத்திட்டத்திற்காக விண்ணப்பிக்க வேண்டிய கடைசி நாள் **31.07.2021**. இதற்குரிய விண்ணப்பங்கள் மற்றும் கூடுதல் விவரங்களை www.fisheries.tn.gov.in என்ற இணையதளத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

விருப்பமுள்ளவர்கள் நல்லதங்காள் ஓடைஅணை, கோனேரிப்பட்டி, தாராபுரத்தில் இயங்கி வரும் மீன்வள ஆய்வாளர் (தொலைபேசி எண். 9629191709) அலுவலகத்தினை தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும், விவரங்களுக்கு adferode1@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரி மற்றும் 0424 - 2221912 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம்.**